புதுக்கோட்டை மாவட்டம் — வேங்கை வயல் விவகாரத்தில்

# பாரபட்சம் இல்லாமல் நடவடிக்கை எடுத்தது தி.மு.க. அரசு!

## சட்டமன்றத்தில் கே.என்.நேரு பேச்சு!



சென்னை, ஆக. 30-

சட்டப்பேரவையில் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் கே.என்.நேரு பேசியதாவது:-

புதுக்கோட்டை மாவட்டம் வேங்கைவயல் விவகாரத்தைப் பொறுத்தவரைக்கும் அப்படிப்பட்ட நிகழ்வு எங்குமே நடக்கக் கூடாது. இதில் யாருக்கும் மாற்றுக்கருத்து இல்லை.

2022 டிசம்பர் 24ஆம் தேதி வேங்கைவயல் சம்பவம் நடந்தது. அந்தச் சம்பவம் நடந்த இரண்டு நாட்கள் கழித்து, டிசம்பர் 26ஆம் தேதி புகார் தரப்பட்டது.

புகார் அளிக்கப்பட்ட அன்றைக்கே இந்த விஷயம் தொடர்பாக வெள்ளனூர் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. 2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14ஆம் தேதி இந்த வழக்கு சி.பி.சி.ஐ.டிக்கு மாற்றப்பட்டது.

இந்த வழக்கை சிபிஐ விசாரிக்க வேண்டும் என்று ஒரு சிலர் வழக்கு போட்டார்கள். அதை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், 29.3.2023 அன்றைக்கு ஓய்வு பெற்ற நீதியரசர் சத்தியநாராயணன் தலைமையில் ஒரு நபர் கமிஷன் அமைத்தார்கள்.

இந்த வழக்கிலே அன்றைக்கு சிபிசிஐடி நூற்றுக்கும் மேற்பட்ட சாட்சிகளிடம் விசாரணை நடத்தினார்கள். பல பேருடைய அலைபேசி எண்கள், தொலைத்தொடர்பு தகவல்கள் ஆய்வு செய்தார்கள். சிலரிடம் உயிரியல் மாதிரி எடுத்து, டிஎன்ஏபகுப்பாய்வு செய்யப்பட்டது.

அதன் அடிப்படையில், மூன்று பேர் குற்றவாளிகள் என்று உறுதி செய்யப்பட்டு, ஜனவரி 2025 இல் நீதிமன்றத்திலே குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுவிட்டது.

மிகவும் உணர்வுபூர்வமானஇந்த வழக்கை, எங்கள் தலைவர் தலைமையிலான அரசு மிகவும் கவனமாககையாண்டார்கள்.

ஆனால் சட்டத்துறை அமைச்சரான நம்முடைய சி.டி. நிர்மல்குமார் அவர்கள், அன்றைக்குஇந்த மாதிரிசம்பவம் நடக்கக் கூடாது என்று தான்பதிவு போட்டார். பிறகு, அந்த பதிவையே நீக்கி விட்டார். அவ்வாறுபதிவை நீக்கினாலும், நல்ல வேளை அதனுடையது இருக்கிறது.

இன்றைக்கு சட்டத்துறை அமைச்சராக இருக்கின்ற சி.டி. நிர்மல்குமார், அன்றைக்கு என்ன செய்தார் தெரியுமா? இந்தச் சம்பவத்திலே கலவரத்தை ஏற்படுத்த வேண்டும் என்று, பாதிக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்கள் அனைவரையுமே குற்றவாளிகள் என்று சொல்லி, சமூக வலைதளத்திலே பதிவு போட்டார். அதன் பிறகு, பல காரணத்தால், அவர் போட்ட பழைய பதிவையெல்லாம் தேடித் தேடி நீக்கிவிட்டார். ஆனாலும் அவர் போட்ட ட்வீட்டுக்கான ஆதாரங்கள் ஸ்கிரீன் ஷாட்ஆகஇருக்கிறது.

(குறுக்கீடு)

அவர் போட்ட ட்வீட்டுக்கான ஆதாரங்கள் ஸ்கிரீன் ஷாட் ஆக இருக்கிறது. சரி, நாங்கள்தான் அங்கெல்லாம் போகவில்லை, வர வில்லை என்று சொல்கிறீர்கள்.

நான் மீண்டும் குற்றம் சொன்னதாக நீங்கள் நினைக்கக் கூடாது. சரி, இப்போது வேங்கைவயலுக்கு எங்கள் தலைவர் போகவில்லை என்றுசொல்கிறீர்களே... நாங்கள் உறுதியாகச் செயல்பட்டு குற்றவாளிகளைக் கண்டுபிடித்தோம். குற்றவாளிகள் முரளிராஜா, சுதர்சன், முத்துக் கிருஷ்ணன் ஆகியோருக்குத் தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது.

முதலமைச்சர் போகவில்லை என்றுநீங்கள சொல்கிறீர்களே... இன்றைக்கு திண்டுக்கல் மாவட்டத்தில் வடமதுரை அடுத்த தங்கம்மாபட்டியில், அரசு உயர்நிலைப் பள்ளி குடிநீர் தொட்டியில் ஆகஸ்ட் 2ஆம் தேதி மனிதக் கழிவு கலந்திருக்கிறார்கள்.

அதற்கு இந்த முதலமைச்சர் போனாரா? முதலில் அப்படி ஒரு சம்பவம் நடந்தது என்று அவருக்குத் தெரியுமா? இந்த சம்பவத்திலே யார் மேலாவது நடவடிக்கை எடுத்திருக்கிறீர்களா? தமிழ்நாட்டில் இன்றைக்கு எத்தனையோ குற்றச் சம்பவங்கள் நடக்கிறதே, அதில் ஏதாவது ஒன்றிற்காவது முதலமைச்சர் போனாரா? அதற்கு ஏதாவது விளக்கம் சொல்வார்களா என்று கேட்கின்றேன்.

இவ்வாறு கே.என். நேரு பேசினார்.

எங்கள் தலைவருக்கும் — அண்ணன் தொல்.திருமாவளவனுக்குமிடையே இருப்பது

# தேர்தல் கூட்டணி அல்ல; அது கொள்கைக் கூட்டணி!

## சட்டப் பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!



**சென்னை, ஆக. 30-**

**எங்கள் தலைவர் அவர்களுக்கும், அண்ணன் தொல். திருமாவளவன் அவர்களுக்கும் இடையே இருப்பது தேர்தல் கூட்டணி மட்டும் இல்லை, அது ஒரு கொள்கைக் கூட்டணி என்று சட்டப் பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.**

சட்டப் பேரவையில் சமூக நலத் துறை மானியம் மீதான பதிலுரையில், அமைச்சர் வன்னியரசு நன்றி தெரிவித்து பேசும் போது, சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், குறுக்கிக்கிட்டு பேசியதாவது:-

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எல்லோருக்கும் நன்றி சொன்னார்கள். எனக்கும் நன்றி சொன்னார்கள். குறிப் பிட்டு நான் பேசியதையெல்லாம் பேசினார்கள்.

"என்னுடைய வெற்றியை விட திரு. வன்னியரசு அவர்களின் வெற்றி எனக்கு மிக முக்கியம்" என்று நான் பேசியதைக் குறிப்பிட்டு எனக்கு நன்றி சொன்னார்கள். அதற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் அவர் சொல்லியிருக்கிறார். அண்ணன் தொல். திருமா வளவன் அவர்களுக்கு நாங்கள் நன்றி சொல்லவில்லை என்று.

ஆனால் அவரிடத்தில் நான் சொல்லிக் கொள்வது, எங்களுடைய தலைவர் அவர்களுக்கும், எழுச்சித் தமிழர் அண்ணன் தொல். திருமாவளவன் அவர்களுக்கும் இருவர்களுக்குமிடையே இருப்பது தேர்தல் கூட்டணி கிடையாது, தேர்தலுக்கு முன்பு ஒரு கூட்டணியாகவும் தேர்தல் முடிவுகள் வந்ததற்குப் பின்பு ஒரு கூட்டணியாகவும் மாறுகின்ற கூட்டணி கிடையாது. அது ஒரு கொள்கைக் கூட்டணி.

மேலும் நான் பலமுறை பெருமையாகச் சொல்லி இருக்கின்றேன். என்னுடைய அரசியல் ஆசான் என்றால் அது அண்ணன் தொல். திருமாவளவன் அவர்களை ஏற்றுக் கொள்கின்றேன் என்று பலமுறை சொல்லியிருக்கின்றேன்.

எனவே அண்ணன் தொல். திருமாவளவன் அவர்களுக்கு என்றைக்குமே எங்களின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.

மற்ற மாநிலங்களை விட தி.மு.க. ஆட்சியில்தான்

# தலித்துகளுக்கு எதிரான வன்முறைகள் கட்டுப்படுத்தப்பட்டது!

## சட்டப்பேரவையில் கழகக் கொறடா எ.வ.வேலு ஆதாரங்களுடன் விளக்கம்!



**சென்னை, ஆக. 30-**

**தலித்துகளுக்கு எதிரான வன்முறைகளை கட்டுப்படுத்துவதில் மற்ற மாநிலங்களை விட திமுக ஆட்சி சிறப்பாக செயல்பட்டது என்று ஆதாரத்துடன் சுட்டிக்காட்டி சட்டப்பேரவையில் கழக கொறடா எ.வ.வேலு பேசினார்.**

சட்டமன்ற கூட்டத் தொடரில், நேற்று தி.மு.க. கொறடா எ.வ.வேலு பேசியதாவது:

இந்த சட்டமன்றத்தில் நேற்று பேசிய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள், ஒரு தவறான கருத்தை இங்கே பதிவு செய்துள்ளார், அதாவது தலித்துகளுக்கு எதிரான கொடுமைகள் நடந்த மாநிலத்தில் தமிழ்நாடு தான் முதலிடம் என்று குறிப்பிட்டுள்ளார், அவர் சொல்வது முற்றிலும் தவறானது,

அதனை இங்கு ஆதாரத்துடன் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன், மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தேசிய குற்ற ஆவண காப்பகம் இந்தியாவிலேயே எந்தெந்த மாநிலங்களில் எவ்வளவு குற்றங்கள் நடைபெறுகிறது என்று ஆய்வு செய்து அறிக்கை வெளியிடும், அந்த ஆய்வறிக்கையின்படி உண்மையான தரவு என்னவென்றால், தலித்துகளுக்கு எதிரான அதிக குற்றங்கள் நடைபெற்ற முதல் மாநிலமாக உத்திரபிரதேசமும், இரண்டாவது மாநிலமாக ராஜஸ்தானும் , மூன்றாவது மத்திய பிரதேசமும் நான்காவதாக பீகாரும் ஐந்தாவதாக மகாராஷ்டிரமும் , இடம்பெற்றுள்ளன, இதில் தமிழ்நாடு பத்தாவது இடத்தை தான் பிடித்துள்ளது,

அதாவது 71 ஆயிரம் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு உத்தரபிரதேசம் முதலிடத்திலும், 8,110 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு தமிழ்நாடு 10வது இடத்தில் இருக்கிறது,

அதிலும் குறிப்பாக சொல்ல வேண்டும் என்றால் பழங்குடி இன மக்களுக்கு எதிரான குற்ற வழக்குகளில் தமிழ்நாடு 15வது இடத்தில் தான் இருக்கிறது என்பது தேசிய குற்ற ஆவண காப்பகத்தின் தரவுகளாகும்.

ஆகவே தி.மு.க. ஆட்சியில் தலித்துகளுக்கு எதிரான குற்றங்களை கட்டுப்படுத்தி, சட்டம் ஒழுங்கை நிலைநாட்டியுள்ளோம் என்பதை ஆதாரத்துடன் இந்த அவையில் பதிவு செய்கிறேன், ஆனால் பொதுப் பணித்துறை அமைச்சர் இந்த அவையில் வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என்ற கிராமத்து பழமொழி போல் தனது வாய்க்கு வந்தபடி தவறான தகவலை அவைக்கு தருவது சரியல்ல.

இவ்வாறு அவர் பேசினார்.

த.வெ.க. அரசின் நிர்வாகச் சீர்கேட்டால் மக்களின் அத்தியாவசியத் தேவைகளின் விலை கடும் உயர்வு!

# விளம்பரங்களில் மட்டுமே கவனம் செலுத்தும் அரசு!

## தி.மு.க. ஐ.டி.விங் விமர்சனம்!

*சென்னை, ஆக. 30 -*

தவெக அரசின் நிர்வாகச் சீர்கேட்டால் ஏழை, எளிய மக்களின் அத்தியாவசியத் தேவைகளின் விலைகள் விண்ணைத் தொடும் அளவிற்கு அதிகரித்துள்ளன. விளம்பரங்களில் மட்டுமே கவனம் செலுத்தும் தவெக அரசு, மக்கள் சந்திக்கும் நெருக்கடியைக் கண்டுகொள்ளாமல் கண்மூடி மௌனமாக இருப்பதாக தி.மு.க. ஐ.டி. விங் விமர்சித்துள்ளது.

தமிழ்நாட்டில் சமையல் எண்ணெய், சர்க்கரை, காய்கறிகள் உள்பட அத்தியாவசியப் பொருட்களின் விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது. இதை கட்டுப்படுத்த எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் தவெக அரசு கண்டுகொள்ளாமல் இருப்பது மக்கள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. பெட்ரோல், டீசல், காஸ் சிலிண்டர், சமையல் எண்ணை, காய்கறிகள் மற்றும் உணவுப் பொருட்களின் விலை என அத்தியாவசியப் பொருட்களின் இந்த கடுமையான விலை உயர்வு என்பது மக்களை பெரிதும் பாதித்து வருகிறது. இதனிடையே, பணவீக்கம் தேசிய சராசரி 4.45 சதவிகிதமாக இருக்கும் நிலையில், தமிழ்நாட்டில் பணவீக்கம் 5.44 சதவிகிதமாக உயர்ந்துள்ளதை சுட்டிக்காட்டி திமுக ஐடி விங் கடுமையாக விமர்சித்துள்ளது.

த.வெ.க. அரசின் நிர்வாகச் சீர்கேட்டால் ஏழை, எளிய மக்களின் அத்தியாவசியத் தேவைகளின் விலைகள் விண்ணைத்தொடும் அளவிற்கு அதிகரித்துள்ளதாகவும் விளம்ப ரங்களில் மட்டுமே கவனம் செலுத்தும் தவெக அரசு, மக்கள் சந்திக்கும் நெருக்கடியைக் கண்டுகொள்ளாமல் கண்மூடி மௌனமாக இருப்பதாகவும் தி.மு.க. ஐ.டி.விங் குற்றம் சாட்டியுள்ளது.

தமிழ்நாட்டில் தாறுமாறாக எகிறிய அத்தியாவசியப் பொருட்களின் விலை!

# காய்கறி, அரிசி, சர்க்கரை, பருப்பு, எண்ணெய் விலை கிடுகிடு உயர்வு!

## இல்லத்தரசிகள் அதிர்ச்சி – கண்டுகொள்ளாத அரசு!

*சென்னை, ஆக. 30 -*

அத்தியாவசிய பொருட்களின் விலை தாறுமாறாக உயர்ந்து வரும் நிலையில், காய்கறி, அரிசி, சர்க்கரை, பருப்பு, எண்ணெய் விலைகளும் கிடுகிடுவென உயர்ந்து வருது இல்லத்தரசிகளை கடும் அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளது. இதை கட்டுப்படுத்த தமிழ்நாடு அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பது மக்கள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்பட்ட போர் உள்ளிட்ட காரணங்களால் கடந்த சில மாதங்களாக கேஸ் சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் தேநீர் கடைகள், ஓட்டல்களில் உணவுகளின் விலை உயர்வு மக்களை வாட்டி வதைத்து வந்தது. இதிலிருந்தே மக்கள் மீள முடியாத நிலையில், தற்போது தமிழ்நாட்டில் தாறுமாறாக விலைவாசி உயர்ந்துள்ளது. வேகமாக உயர்த்தப்பட்டு வரும் காய்கறி, அரிசி, சர்க்கரை, பருப்பு, எண்ணெய் விலை தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் இடியாய் இறங்கி வருகிறது. முதலில் அரிசி விலை கணிசமாக உயர்ந்த நிலையில், பிறகு சர்க்கரை விலை உயர்ந்தது. அதைத் தொடர்ந்து இப்போது சமையலுக்கு அத்தியாவசியமாக இருக்கும் வெங்காயத்தின் விலையும் தொடர்ந்து உயர்ந்து வருகிறது.

தற்போது ஒரு கிலோ சர்க்கரை 80 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. இது ஒருபுறம் இருக்க, மறுபுறம் மீண்டும் வெங்காய தட்டுப்பாடு இல்லத்தரசிகளை வாட்டி வதைக்க தொடங்கியுள்ளது. இந்தியாவில் பருவமழை தாமதம், சில முதன்மை உற்பத்திப் பகுதிகளில் குறைந்த மழைப்பொழிவு காரணமாக வெங்காயச் சாகுபடி கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதன் எதிரொலியாக காய்கறி கடைகளில் வெங்காயத்தின் விலை ஒரு கிலோ 70 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அதேபோல் சின்ன வெங்காயம் விலையும் ஏறுமுகத்திலேயே இருந்து வருகிறது. தினசரி சமையலுக்கு பயன்படுத்தப்படும் பெரிய வெங்காயம் மற்றும் சின்ன வெங்காயம் விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருவது இல்லத்தரசிகளிடையே கவலையை ஏற்படுத்தி உள்ளது. ஆயிரத்து 400 ரூபாய்க்கு விற்பனையான 25 கிலோ மூட்டை அரிசி இன்று தற்போது ஆயிரத்து 800 ரூபாய் வரை விற்பனையாகிறது.

அரிசி விலை உயர்ந்த நிலையில் தற்போது எண்ணெய் மற்றும் மளிகை பொருட்களின் விலை உயர்ந்துள்ளதால், பொது மக்கள் அதிர்ச்சியில் உறைந்துள்ளனர். அடுத்தடுத்த பண்டிகைகள் நெருங்கி வரும் சூழலில், விலை உயர்வு பொதுமக்களை அதிருப்தி அடையச் செய்துள்ளது. தமிழ்நாடு அரசு அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வைக் கட்டுக்குள் கொண்டு வருவதற்கு எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டு மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

# குடந்தை, கரூரில் இருந்து நேபாளம் சென்ற 40 பேரின் குடும்பத்தினர் கண்ணீர்!

## பத்திரமாக மீட்டுக் கொண்டு வரக் கோரிக்கை!

*தஞ்சை, ஆக.30-*

தஞ்சை மாவட்டம் கும்பகோணம் அடுத்த நாகேஸ்வரன் தெற்கு வீதியில் செயல்படும் சூப்பர் யாத்ரா ஏஜென்சி மூலம் நேபாளத்துக்கு 57 பேர் ஆன்மீக சுற்றுலா சென்றனர். முன்தினம் நேபாளம் நாட்டின் ரசுவா மாவட்டத்தில் போதேகோஷி ஆற்றில் ஏற்பட்ட திடீர் வெள்ளப்பெருக்கில் 3 பஸ்களில் சென்ற 57 பேர் சிக்கினர். இதில் ஒரு பஸ்சின் டிரைவர் சாமர்த்தியத்தால் 20 பேர் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர்.

இதைதொடர்ந்து 2 பஸ்களுடன் மாயமான மயிலாடுதுறை ஓய்வுபெற்ற நீதிபதி சிவஞானம்(63), மூர்த்தி(65), பத்மினி(61), கடலூர் மாவட்டம் புவனகிரி திரிபுரசுந்தரி (67), பள்ளிப்படை முருகானந்தம்(69), தர்மபுரி புஷ்பா (54), கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூரை சேர்ந்த பிரேமாவாணி (45), புஷ்பராணி(59), நெல்லூர் திம்மராயசாமி(46), மம்தா(39), மயிலாடுதுறை மாவட்டம் கழுக்காணிமுட்டம் புஷ்பலதா(60), நல்லூர் ராஜேஷ்வரி(57), கூறைநாடு வெங்கட்ராமன்(50), நாமக்கல் வசந்தபுரம் கிருஷ்ணவேணி(65), புதுச்சேரி மாநிலம் காமராஜ் நகர் ஆனந்தசுந்தரி(58), பெட்டியார்பாளையம் வைஷ்ணவி(50), கீதா(68), தஞ்சை மாவட்டம் களிமேடு அன்பழகி(67), ராஜப்பன் நகர் சித்ரா(61), வ.உ.சி நகர் சிவயோகம்(65), பூக்காரலாயம் இளவரசி(70), கிருஷ்ணாபுரம் தங்கமதி(49), கும்பகோணம் சத்யம் நகர் ராம்குமார்(60), இவரது மனைவி கீதா(56), சுவாமிமலை வடக்குவீதி ராஜ்குமார்(62), இவரது மனைவி ஜெயந்தி(54), செட்டிமண்டபம் ரமேஷ்(68), புதுமணி வடக்கு தெரு திருமலை ராஜன்(54), இவரது மனைவி தையல்நாயகி(54), கர்ண கொல்லை அக்ரஹாரம் சாய்நாத்(70), இவரது மனைவி ஜெயலட்சுமி(64), இவர்களது மகள் கேதாரகவுரி(32), காளிமுத்து நகர் சையது உமர் பாரூக்(29), திருவண்ணாமலை கண்ணம்மாள்(67), திருவாரூர் மாவட்டம் திருக்கண்ணமங்கை கலைச்செல்வி(66), மன்னார்குடி வடுவூர் பாலசுப்பிரமணியன்(58) ஆகிய 36 பேரை தேடும் பணி தொடர்ந்து நடந்து வருகிறது.

இதுவரை மீட்கப்பட்ட கடலூர் மாவட்டம் சிதம்பரத்தை சேர்ந்த தியாகராஜன் (49), கிருபாகரி(49), பழனியப்பன்(69), கலைமதி(67), முத்துக்குமரேசன்(56), மைதிலி (49), நெய்வேலி டவுன்ஷிப் திருமாவளவன்(62), சென்னை மணப்பாக்கம் சத்யா (58), வேளச்சேரி நாவுகபீர்தாஸ்(55), வேளச்சேரி விஜய புவனேஸ்வரி(55), பெசன்ட் நகர் சாந்தி(47), மாறன்(57), கர்நாடக மாநிலம் பெங்களூருவை சேர்ந்த கனகசபை(68), ராதை(64), கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூரை சேர்ந்த ரகுநாதன்(56), மயிலாடுதுறையை சேர்ந்த மணிமேகலை(65), ரத்னகுமார்(65), பூங்குழலி(62), திருச்சியை சேர்ந்த வள்ளிநாயகி(62), சிவரஞ்சனி(46), கற்பகம்(62) ஆகிய 21 பேரை பாதுகாப்புடன் ஹெலிகாப்டர் மூலம் காத்மாண்டுவுக்கு அழைத்து வரவுள்ளனர். பின்னர் அங்கிருந்து விமானம் மூலம் தமிழகத்துக்கு அழைத்து வருவதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகிறது.

இதுகுறித்து கும்பகோணம் சூப்பர் யாத்ரா ஏஜென்சி உரிமையாளர் சையது சாதிக் கூறுகையில், "மாயமான 36 பேரின் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் எங்களது அலுவலகத்துக்கு வந்து விசாரித்து செல்கின்றனர். சிலர் போனில் தொடர்பு கொள்கின்றனர்" என்றார். ஆன்மிக பயணம் மேற்கொண்ட சுவாமிமலையை சேர்ந்த ராஜ்குமார், ஜெயந்தி தம்பதியரின் மகன்கள் மணிகண்டன், கோவிந்தராஜ் ஆகியோர் கூறியதாவது: எங்கள் பெற்றோர் ராஜ்குமார், ஜெயந்தி ஆகியோர் சூப்பர் யாத்ரா ஏஜென்சி மூலம் கடந்த 23ம் தேதி கும்பகோணத்தில் இருந்து ஆதி கைலாசுக்கு சென்றனர். 23, 24, 25ம் தேதிகளில் எங்களிடம் பேசினார்கள். 26ம் தேதி காலையில் அவர்கள் சென்ற இடத்தில் வெள்ளப்பெருக்கு என கேள்விப்பட்டோம். அதை பார்த்ததில் இருந்து எங்களது குடும்பமே மன உளைச்சலில் உள்ளது. இதுவரை 21 பேரை மீட்டுள்ளனர். அவர்களை போன்று எங்களது பெற்றோர் மற்றும் மாயமானவர்களை மீட்டு கொண்டு வர அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

கரூரில் இருந்து ஆன்மீக சுற்றுலாவுக்கு ஒரே குழுவாக நேபாளத்துக்கு சென்ற கரூர் வடக்கு காந்தி கிராமம் ஹவுசிங் போர்டை சேர்ந்த அன்பரசு, கரூர் கேவிபி நகர் பெரியார் நகரை சேர்ந்த தனலட்சுமி(60), கரூர் காமராஜபுரம் வடக்கு தெருவை சேர்ந்த கற்பகம்(55), கரூர் அருணாசலம் 3வது தெருவை சேர்ந்த தமிழரசி அசோகன் ஆகிய 4 பேரும் மாயமாகியுள்ளனர். இவர்களின் செல்போன் எண்ணை உறவினர்களால் தொடர்பு கொள்ள முடியவில்லை. இதுகுறித்து கற்பகத்தின் கணவர் பெரியசாமி கூறுகையில், எனது மனைவி கற்பகம் கடந்த 14ம் தேதி கயிலாய யாத்திரைக்கு புறப்பட்டு சென்றார். நேற்று முன்தினம் காலை அவரை தொடர்பு கொண்டு பேசிய போது நாங்கள் தற்போது சீன நாட்டின் எல்லையில் இமிகிரேஷன் பணிகளுக்காக காத்திருக்கிறோம் என்றனர். அதன் பின்னர் அவரை தொடர்பு கொள்ள முடியவில்லை.

அவரை தேடுவதற்காக எங்களது குடும்பத்தினர் சிலரை அனுப்பி வைத்துள்ளேன் என்றார்.

நேபாளத்துக்கு சென்ற கரூர் வடக்கு காந்தி கிராமம் ஹவுசிங் போர்டு பகுதியை சேர்ந்த அன்பரசு புலியூர் காளிபாளையம் பகுதியில் உள்ள அரசு தொடக்கப்பள்ளியின் தலைமை ஆசிரியராக பணியாற்றி வருகிறார். இதுகுறித்து அவரது மகள் கூறுகையில், நான் எனது தந்தையிடம் தினமும் காலையில் எங்கு இருக்கிறார் என்று லொகேஷன் பகிருமாறு கூறுவேன். அதன்படி நேற்று முன்தினம் காலை அவரை தொடர்பு கொண்டு பேசியபோது சீன நாட்டின் எல்லை பகுதியில் காத்திருப்பதாக கூறினார். அதன்பிறகு எனது தந்தையை தொடர்பு கொள்ள முடியவில்லை. இதனால் எங்களது குடும்பத்தினர் பதற்றத்துடன் இருந்து வருகிறோம் என்றார்.



கழகத் தலைவர் "மு.க.ஸ்டாலின் தாத்தாவின் அன்பு பரிசு" என்ற தலைப்பில் கோவை மாநகர் மாவட்டம், சிங்காநல்லூர் சட்டமன்ற தொகுதி, நந்தா நகர் பகுதி கழகத்தின் சார்பில் பகுதி கழக செயலாளர் எஸ்.எம்.சாமி ஏற்பாட்டில் 57 வது வட்ட கழகத்திற்குட்பட்ட மாநகராட்சி ஆரம்ப பள்ளியில் பயிலும் 300 மாணவ, மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகளை கோவை மாநகர் மாவட்ட அவைத்தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர், முனைவர் கணபதி ப.ராஜ்குமார் வழங்கினார். இதில் வட்ட கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள் சண்முகம், மாரிமுத்து, பாலகிருஷ்ணன், சிவா, மாமன்ற உறுப்பினர் சாந்தமணி உள்பட பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# ஒழுங்கு நடவடிக்கை

## தலைமைக் கழக அறிவிப்பு

தென்காசி தெற்கு மாவட்டம், தலைமை பொதுக்குழு உறுப்பினர் ஏ.பி. அருள், கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை- 600 018.
நாள்: 28.08.2026.

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.